தேதி- 17 ஜன்வரி 2014

# ராகுல் விவகாரத்தில் அச்சம்கொண்டுள்ள காங்கிரஸ்

**-அருண் ஜெய்ட்லி**
*எதிர்கட்சித் தலைவர் (மாநிலங்களவை*

.காங்கிரஸ் கட்சி பிரதமர் வேட்பாளர் வேண்டாம் என்று அறிவித்துவிட்டது. ஆனால் அவர்களது தேர்தல் பிரச்சாரத்துக்கு திரு. ராகுல் காந்திதான் தலைமை தாங்குவார். ஒரு குடும்பம் ஒரு கட்சியை கட்டுப்படுத்துவதால் ஏற்படும் சீர்கேடுகள் இப்போது தெரியத் தொடங்கிவிட்டன. கடந்த 25 ஆண்டுகளாக காந்தி குடும்பத்தைச் சேர்ந்த யாரும் இந்தியாவின் பிரதமராக இருந்ததில்லை. இந்தியா மாறிக்கொண்டிருப்பது உண்மை. காந்தி குடும்பத்தினர் ஒரு கட்சியைக் கட்டுப்படுத்தலாம் ஒரு நாட்டை அல்ல. .2004இல் குடும்பத்தை ஒதுங்கி இருந்ததற்குக் காரணம் பதற்றம்தான். முகத்தில் அறையும் தோல்விக்கான அறிகுறிதான் ராகுல் காந்தியை 2014 தேர்தலுக்கான பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதற்கான தயக்கத்தின் காரணம்.

இது எப்போதுமே முதன்மை நோக்கமாக இருந்ததில்லை.பிரதமர் வேட்பாளர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுவார் என்று திருமதி சோனியா காந்தி டிசம்பர் 2013இல் அறிவித்திருந்தார். பிரதமர் முனைவர் மன்மோகன் சிங், தனது அண்மைய செய்தியாளர்கள் சந்திப்பில் பிரதமராவதற்கு ராகுல் காந்திக்கு இருக்கும் தகுதிகளைப் பட்டியலிட்டார். பிறகு ஏன் கட்சி அச்சம் கொள்கிறது? எதிர்மறையான சூழலில் போராடுவதற்கான உத்வேகத்தை காங்கிரஸ் இழந்துவிட்டது. தில்லி சட்டமன்ற தேர்தலில் இது முதன் முதலாக வெளிப்பட்டது. மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்ட

திரு.ராகுல் காந்தியின் கூட்டத்தைத் தவிர வேறெந்த காங்கிரஸ் தலைவரும் தில்லியில் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.. இந்தப் பதற்றம் இப்போது அனைவரும் அறியக் கூடியதாக இருக்கிறது, எதிர்மறையான அரசியல் சூழலில் இருக்கும் ஒரே துருப்பு சீட்டையும் ஏன் வலுவிழக்கச் செய்ய வேண்டும்?. எதிர்மறைச் சூழலை எதிர்த்துப் போராடுவதற்கான நெருப்பு முழுதாக அணைந்துவிட்டது. நரேந்திர மோடிக்கும் ராகுல் காந்திக்கும் இடையிலான போட்டியில் இருவருக்கும் இடையில் மிகப் பெரிய வித்தியாசம் இருப்பதைச் சொல்லும் கருத்துக் கணிப்புகளை நீங்கள் நிராகரிக்கலாம். காங்கிரஸ் தரப்பின் இந்த புரிதல் காலம்கடந்ததாக இருக்கலாம். ஆட்சி அமைபப்தற்கான வாய்ப்பு அறவே அற்ற சூழலில் திரு ராகுல் காந்தியை ஏன் பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும்!

பிரத்மர் ஒரு துணிச்சலான பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். 2014இன் வெற்றி ராகுல் காந்தியுடையது என்று அறிவித்திருக்கிறார். தோல்வியும் கணக்கில் கொள்ளப்படுமா? எனக்கு சந்தேகமாக இருக்கிறது. காந்தி குடும்பத்தினர் எந்த தவறும் செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் காங்கிரஸ் கட்சி செயல்பட்டுவருகிறது அவர்கள் எப்போதும் தோற்பதில்லைl. கட்சிதான் தோற்கிறது. அலோசகர்கள் அவர்களுக்கு தவறான ஆலோசனைகளை வழங்குகிறார்கள். காந்தி குடும்பத்தினருக்கு கட்சிக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் கட்சியே அவர்கள்தான் . .

✲✲✲✲✲